# 49. ஞாயவாதிகள் விளக்குவர்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

**வியனில மனலுயிர் புனலெனு நான்கினும்**
**விளைந்ததிவ் வுலகென முடிபு**
**பயிலிழி பாமரர் பரசிவ மிலையவை**
**பழமையிற் பழமையென் றறையின்**
**குயவனில் லாமலுங் குடம்வரு மோபெருங்**
**கோபுரம் வனைந்தவ னிலையோ**
**நயவுணர் விருந்திடி னறிதிரென் றறிவுடை**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

வியன் நிலம் அனல் உயிர் புனல் எனும் நான்கினும்
விளைந்தது இவ் உலகு என முடிவு
பயில் இழி பாமரர் பரசிவம் இலை அவை
பழமையில் பழமை என்று அறையின்

குயவன் இல்லாமலும் குடம் வருமோ பெரும்
கோபுரம் வனைந்தவன் இலையோ
நய உணர்வு இருந்திடின் அறிதிர் என்று அறிவுடை
ஞாயவாதிகள் விளக்குவரே.

அகன்ற நிலம், நெருப்பு, காற்று, நீர் ஆகிய நான்கு பூதங்களாலும் இவ்வுலகம் தோன்றியது என்னும் முடிவு கூறும் கீழான பாமரர் கடவுள் இல்லை. அவை பழமையினும் பழமையாக உள்ளவை என்பர். "அவ்வாறு கூறினால் குயவன் இல்லாமல் குடம் வருமா? கோபுரத்தைக் கட்டியவன் இல்லையோ? நல்ல அறிவிருப்பின் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்." என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 1

**உணர்வறு பூதமு மவைகளின் விருத்தியு**
**முணர்வுடை யுயிர்களைச் செயுமோ**
**உணர்வுடை யுயிர்களு முணர்வறு பொருளிருந்**
**துதித்திடு மியற்கையை யுறுமோ**
**உணர்வறு பொருளறி வாமெனி னிறந்தவ**
**ருடலறி வின்றழி வானேன்**
**நணுகறி விருந்திடி னறிதிரென் றறிவுடை**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

உணர்வு அறு பூதமும் அவைகளின் விருத்தியும்
உணர்வுஉடைய உயிர்களைச் செயுமோ
உணர்வுஉடை உயிர்களும் உணர்வு அறு பொருள் இருந்து
உதித்திடும் இயற்கையை உறுமோ
உணர்வு அறு பொருள் அறிவாம் எனில் இறந்தவர்
உடல் அறிவின்று அழிவானேன்
நணுகு அறிவு இருந்திடின் அறிதிர் என்று அறிவுடை
ஞாயவாதிகள் விளக்குவரே.

அறிவில்லாத பூதங்கள் அவைகள் மூலம் தோன்றியவைகளும் அறிவுடைய உயிர்களைப் படைக்குமோ? அறிவுடைய உயிர்கள் அறிவற்ற பொருள்களிலிருந்து தோன்றிடும் இயற்கையை அடையுமோ? அறிவற்ற பொருள் அறிவுடைப் பொருள் என்று கூறின் இறந்தவர் அறிந்துகொள்ளுங்கள் என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 2

**வடிவமி லளப்பறு பேரறி வாமொரு**
**வானென வெங்கணு மல்கி**
**வடிவுரு வுடையிய மானனுக் கறிவசை**
**வாகவு மிருக்குமொர் சிவனே**
**கடவுளென் றருமறை யறைதரு மேயது**
**கறையறு முரையென வுள்கி**
**நடலையி லந்நெறி நின்றிட னலனென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

*வடிவம் இல் அளப்பறு பேரறிவுஆம் ஒரு*
*வான் என எங்கணும் மல்கி*
*வடிவு உருவுடை இயமானனுக்கு அறிவு அசைவு*
*ஆகவும் இருக்கும் ஓர் சிவனே*
*கடவுள் என்று அருமறை அறைதருமே அது*
*கறை அறும் உரை என உள்கி*
*நடலையில் அந்நெறி நின்றிடல் நலன் என*
*ஞாயவாதிகள் விளக்குவரே.*

உருவமில்லாத ஒரு எல்லையில்லாத பேரறிவாகும் ஆகாயமென எவ்விடமும் பரவி, உருவமுடைய உயிருக்கு அறிவு இயக்கமாகவும் இருக்கும் ஒரு சிவபெருமானே கடவுள் என்று வேதங்கள் கூறும். அதுவே குற்றமற்ற மற்ற உரை என நினைத்துப் பொய்யில்லாத அந்நெறியில் நிற்றல் நன்மை பயக்கும் என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 3

**சித்திர வுலகினைச் செய்யிறை யாய்நனி**
**செய்வதைப் பிரேரகஞ் செயமா**
**சத்தியுஞ் சிவனுமொ ருருவினி லிலகிய**
**சத்திய மறியுநுண் ணியர்பால்**
**நித்திய மாயவி ரமலசின் மயத்திரு**
**நிஜத்திரு வாமது தானே**
**நத்தமும் பகலுமி லாநடு நிலையென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

4. **நத்தம்** = இரவு; நக்தம் என்பது வடசொல்.

சித்திர உலகினைச் செய் இறையாய் நனி
செய்வதைப் பிரேரகம் செயமா
சத்தியும் சிவனும் ஓர் உருவினில் இலகிய
சத்தியம் அறியும் நுண்ணியர்பால்
நித்தியமாய் அவிர் அமல சின்மயத் திரு
திஜத்திருஆம் அது தானே
நத்தமும பகலும் இலா நடுநிலை என
ஞாயவாதிகள் விளக்குவரே.

அழகிய உலகினைப் படைக்கும் இறைவனாயிருந்து, நன்கு செய்வதை இயக்குதற்குப் பெரும் சத்தியும் சிவனும் ஓர் உருவினில் விளங்கி, உண்மையை அறியும் நுண்ணிய அறிவுளர்பால் நித்தியமாய் விளங்கும் மலமற்ற அறிவான தெய்வம் மெய்ப்பொருள் என, இரவும் பகலுமில்லாத நடுநிலையானது என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 4

**அரிவரி கெழுமிளை யோரதன் மேன்முறை**
**யறியவு முளரது புரையச்**
**சரியையுங் கிரியையும் யோகமு ஞானமுஞ்**
**சாதகர்க் காகுமந் நெறியே**
**புரிபவர் மார்க்கநன் மார்க்கமெ னாத்துணி**
**பொருள்கணித் தாட்படு பவரே**
**நரகடை யாரெனப் பறைதுவைப் பாமென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

அரிவரி கெழும் இளையோர் அதன் மேல் முறை
அறியவும் உளர் அது புரையச்
சரியையும் கிரியையும் யோகமும் ஞானமும்
சாதகர்க்கு ஆகும் அந்நெறியே
புரிபவர் மார்க்கம் நன்மார்க்கம் எனாத் துணி
பொருள் கணித்து ஆட்படுபவரே
நரகு அடையார் எனப் பறை துவைப்பாம் என
ஞாயவாதிகள் விளக்குவரே.

சிங்கத்தின் வலிமை நிறைந்த இளையோர் அதற்கும் மேலான முறையையும் அறிவர் என்பதுபோல், சரியை, கிரியை, யோகம், ஞானம்

5. **துவைத்தல்** = ஆரவாரித்தல்; ஒலித்தலெனவுங் கூறுப. "கறங்குமணி துவைக்கும்" என்றார் **மலைபடுகடாத்தி**னரும்.

ஆகியவை சாதகர்க்கும் ஆகும். அந்த நெறியைச் சாதகம் செய்பவர் மார்க்கமே நன்மார்க்கம் என்று ஒளியான பொருளைக் கணித்து அதற்கு அடிமையாகுபவரே நரகம் அடையார் எனப் பறையடித்து ஆரவாரிப்போம் என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 5

**கல்லினும் வலிதெரி கனலினும் பெரிததி**
**கடுமனக் கயவர்கள் வாயின்**
**சொல்லினுங் கொடிதுழி தருமுசு மனதிது**
**துணிவொடு துணையுறுங் காலம்**
**புல்லறி வொழித்துர னுணர்த்திநின் றிடுமுயர்**
**பொறையினில் வரையையும் வெல்லும்**
**நல்லரு ணிலைக்குமொ ருரியநட் பாமென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

*கல்லினும் வலிது எரிகனலினும் பெரிது அதி*
*கடுமனக் கயவர்கள் வாயின்*
*சொல்லினும் கொடிது உழிதருமுசுமனது இது*
*துணிவொடு துணையுறும் காலம்*
*புல் அறிவு ஒழித்து உரன் உணர்த்தி நின்றிடும் உயர்*
*பொறையினில் வரையையும் வெல்லும்*
*நல் அருள் நிலைக்கும் ஓர் உரிய நட்பாம் என*
*ஞாயவாதிகள் விளக்குவரே.*

கல்லினும் வலிமையானது; எரியும் நெருப்பினும் பெரிது; மிகக் கடுமையான மனமுடைய கயவர்களின் வாய்ச் சொல்லினும் கொடியது; சுழலும் குரங்கு மனமானது இது துணிவுடன் துணையாகும் காலத்தில் அற்ப அறிவை ஒழித்து நல்லறிவை உணர்த்திடும். உயர்ந்த பொறுமையில் மலையையும் வெல்லும்; நல்ல அருள் பெறும் முயற்சிக்கு அதனை அடைய உரிய நட்பாகும்! இவ்வாறு ஞாயவாதிகள் விளக்குவார்கள்! 6

**பல்லுயிர்க் குயிரெனு மிறைக்குயி ரிருதய**
**பங்கய மிருப்பிட மென்றே**
**சொல்லிறை யாகம நெறிபிடித் துய்ந்திடு**
**தூவடி யார்கடம் முயிரே**
**வல்லுயிர் பிறவுயிர் புல்லுயி ரெனவவை**
**வருந்தவொர் கொடுந்தொழில் புரியார்**
**நல்லறி வுளர்செவிக் கிதுவமு தாமென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

பல் உயிர்க்கு உயிர் எனும் இறைக்கு உயிர் இருதய
பங்கயம் இருப்பிடம் என்றே
சொல் இறை ஆகம நெறிபிடித்து உய்ந்திடு
தூ அடியார்கள் தம் உயிரே
வல் உயிர் பிற உயிர் புல்உயிர் என அவை
வருந்த ஓர் கொடுந்தொழில் புரியார்
நல் அறிவுளர் செவிக்கு இது அமுதாம் என
ஞாயவாதிகள் விளக்குவரே.

பல உயிர்களுக்கும் உயிராய் இருப்பவன் ஆகிய இறைவனின் இருப்பிடம், உயிர்களின் இருதய தாமரை குகையாகும் என்று சொல்லும் இறைவனுடைய ஆகமத்தின் நெறியைப் பின்பற்றி உய்யும் மனமொழி மெய்யாலும் தூய அடியார்கள் தம்முடைய உயிரே வலிய உயிர், ஏனைய உயிர் அற்ப உயிர் என அவை வருந்தும்படிக் கொடும் செயல்களைச் செய்யமாட்டார்கள். நல்ல அறிவுடையார்க்குச் செவிக்கு இச்செய்தி சிறந்த அமுதமாகும் என்று ஞாயவாதிகள் விளக்குவார்கள். 7

**உயிரினுக் குயிரறி யறிவினுக் கறிவென**
**வுளபெரும் பழம்பொரு ளருளே**
**அயனரி யரன்றிரு வாயிருந் துளபடி**
**யாக்கியு மோம்பியு மழிக்கும்**
**செயல்களுக் கிடைவடி வுடையுயிர் களைவதஞ்**
**செயுமரு ளிலிகளை நோக்கா**
**நயமுறு கருணையி லார்தவ மவமென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

உயிரினுக்கு உயிர் அறிவினுக்கு அறிவு என
உள பெரும் பழம்பொருள் அருளே
அயன் அரி அரன் திருவாய் இருந்து உளபடி
ஆக்கியும் ஓம்பியும் அழிக்கும்
செயல்களுக்கு இடை வடிவுஉடை உயிர்களை வதம்
செயும் அருள்இலிகளை நோக்கா
நலம் உறு கருணைஇலார் தவம் அவம் என
ஞாயவாதிகள் விளக்குவரே.

உயிரினுக்கு உயிர், அறிவினுக்கு அறிவாக உள்ள பெரிய பழமையான பொருள் அருளே பிரமன், திருமால், சிவன் ஆகிய

மூர்த்திகளின் சத்தாய் இருந்து, உள்ளபடிப் படைத்தும் காத்தும் அழிக்கும் செயல்களுக்கு இடையில், உருவமுடைய உயிர்களைக் கொல்லும் அருள் இல்லாதவர்களும் நன்மையுடைய கருணை இல்லாதவர்களும் செய் தவம் பயனில்லாதது என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 8

**கண்ணுடல் செவிநுகர் வாயொடு நயனமுங்**
**கால்புகு மூக்குநம் போலப்**
**பண்ணிய வுயிரழித் துண்ணுமி னெனுமொழி**
**படித்திடு மனுடருக் குலகில்**
**எண்ணறு மசரப தார்த்தமிக் கிருக்கமெய்**
**யிறையுயிர் வதைத்துண்ண வறையான்**
**நண்ணுந ரேயத னாலிது மேலென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

கண் உடல் செவி நுகர் வாயொடு நயனமும்
கால்புகு மூக்கு நம் போலப்
பண்ணிய உயிர் அழித்து உண்ணுமின் எனும் மொழி
படித்திடு மனுட ருக்கு உலகில்
எண்ணறும் அசர பதார்த்தம் மிக்கிருக்க மெய்
இறை உயிர் வதைத்து உண்ண வறையான்
நண்ணுநரே அதனால் இது மேல் என
ஞாயவாதிகள் விளக்குவரே.

கண், உடல், செவி, உண்ணும் வாய், கண், காற்றைச் சுவாசிக்கும் மூக்கு ஆகியவற்றை நம்மைப் போலப் படைக்கப்பட்ட உயிர்களைக் கொன்று உண்ணுங்கள் என்னும் சொல்லைக் கூறும் மனிதர்களுக்கு இவ்வுலகில் அளவற்ற தாவர பதார்த்தங்கள் இருக்க, மெய்ப்பொருளான இறைவன் உயிர்களைக் கொன்று உண்ணும்படி கூறமாட்டார். இறைவனை நாடுபவர்களே! அதனால் இது மேலானது என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 9

**அன்பிறை யினியவுட் சமயவொண் பகலுக்கு**
**மளியில் பரசமய நிசிக்கும்**
**அன்புடை யிறையென வமைந்தவை களுக்குயர்**
**வாயசித் தாந்தவிண் மணியாய்**

**10. அளியில்** = ஈரமில்லாத = கிருபையில்லாத.

**இன்படைந் தவருண கிரிகுரு வெனச்சொலு**
**மேதமின் முருகைய னாகி**
**நன்குடை யீசனுக் குரைத்தது துணிபென**
**ஞாயவா திகள்விளக் குவரே.**

அன்பு இறை இனிய உள் சமய ஒண்பகலுக்கும்
அளிஇல் பரசமய நிசிக்கும்
அன்புடைய இறை என அமைந்தவைகளுக்கு உயர்
வாய சித்தாந்த விண்மணியாய்
இன்பு அடைந்த அருணகிரி குரு எனச் சொலும்
ஏதம் இல் முருகையன் ஆகி
நன்கு உடை ஈசனுக்கு உரைத்தது துணிபு என
ஞாயவாதிகள் விளக்குவரே.

அன்பான இறைவன் நல்ல அகச்சமயம் என்னும் பகலுக்கும், ஈரமில்லாத புறச்சமயமாகிய இரவுக்கும் அன்புடைய இறைவன் என அமைந்து, அவைகளுக்கு உயர்வான சித்தாந்த ஞாயிறாய் இன்பத்தைப் பெற்ற அருணகிரிநாதரின் குருவெனச் சொல்லும் குற்றமில்லாத முருகையனாகி, நன்குள்ள ஈசனுக்கு உரைத்தது முடிவு என ஞாயவாதிகள் விளக்குவார்கள். 10